# DAC மதிப்பாய்வு நியதிகள்

## நேர்முறைத் தாக்கம

*(Impact)*

பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் பிரஜைகளுக்கான அதி செயற்திறன் மிக்க உறுப்பினராக இருப்பதற்கு ஆர்வம் கொண்டுள்ளீர்களா?

பாராளுமன்ற விவாதங்களின்போது உங்களது தொகுதியை பிரதிநிதித்துவம் செய்து சரியான கேள்விகளை எழுப்புவதன் ஊடாக நாட்டின் அபிவிருத்தியை உச்சமடையச் செய்வதற்கு ஆர்வங் கொண்டுள்ளீர்களா?

அப்படியாயின் பொருளாதார ஒத்துழைப்புக்கான அபிவிருத்தி நிறுவனம்/அபிவிருத்தி உதவிக்கான குழு (OECD/DAC) ஏற்றுக்கொண்ட மதிப்பாய்வு நியதிகள் அடங்கிய இந்த கையேட்டுத் தொடரினை வாசிப்பது பிரயோசனமாகும்.

**மதிப்பாய்வுக்கான ஆசிய பசுபிக் பாராளுமன்ற உறுப்பினர்களின் அமையம்**

## அறிமுகம்

பாராளுமன்றத்திற்குள்ள அதிகாரங்களின் ஊடாக மக்களை பிரதிநிதித்துவம் செய்தல், சட்டவாக்கம், அரசாங்கத்தின் பொறுப்புக் கூறல் போன்ற அபிவிருத்தி செயன்முறையில் முக்கிய பாத்திரம் ஒன்றை வகிக்க முடியும். ஆனாலும் அரசாங்கத்தின் கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் வலுவாகவும் சரியாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டதா? என்பதையும், மக்களின் வாழ்க்கையில் அவை விருத்தியை ஏற்படுத்தியதா என்பதையும் எவ்வாறு உறுதி செய்ய முடியும்? அவை சிறந்த கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களா? என்பதை எவ்வாறு உறுதி செய்ய முடியும்?

மதிப்பாய்வின் மூலமான ஆதாரங்களைக் கொண்டு விமர்சன பூர்வமான சிந்தனைகள் ஊடாக திட்டங்கள் மற்றும் கொள்கைகளை வடிவமைப்பதில், செயற்படுத்துவதில், கலாசாரம் ஒன்றை வளர்த்தெடுப்பதில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வகிபாகமானது சிறந்த தலைமைத்துவத்துடன் நியாாயமான, நிலைபேறான அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதாகவும் அமையும்.

அபிவிருத்தி இடையீடுகள் (Intervention) தொடர்பிலான தெளிவான புரிதலுடன் பாராளுமன்ற விவாதாங்களிலும் துறைசார் குழு அறைக் கலந்துரையாடல்களிலும் சரியான கேள்விகளை முன்வைப்பதன் மூலம் பிரஜைகளுக்கான உச்சப்பயன் கிடைப்பதை உறுதி செய்யலாம். பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதங்களின்போது சரியான கேள்விகளை மதிப்பாய்வு ஆதாரங்கள் ஊடாக முன்வைப்பதற்கு அவசியமான அடிப்படைகளை OECD/ DAC மதிப்பாய்வு நியதிகள் வழங்குகின்றன.

## நேர்மறைத் தாக்கம் (Impact)

இடையீடானது ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் என்ன என்பதை அளவீடு செய்வதாகவே OECD /DAC தாக்கம் (Impact) எனும் நியதியை வரைவிலக்கணம் செய்கிறது. இடையீட்டின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட நேர்மறை / எதிர் மறைத் தாக்கங்கள், எதிர்பார்த்த / எதிர்பாராத விளைவுகள், உயர்மட்ட செயற் தாக்கங்களை எந்தளவு தூரம் அளவிடலாம் என்பதையே இந்த நியதி வலியுறுத்துகின்றது.

## முக்கிய விதிமுறைகள்

**தாக்கம்:** இடையீட்டின் ஒட்டுமொத்த சிறப்பம்சம், சாத்தியப்பாடுகளின் நிலைமாற்றத் தாக்கத்தை வெளிப்படுத்துவதாக தாக்கம் நியதி அமைகிறது. **செயற்திறன் நியதியின்** நீட்சியாக சமூக, பொருளாதார, சூழலியல் தாக்கத்தை இடையீடு எந்தளவுக்கு மாற்றியிருக்கிறது என்பதை **தாக்கம்** அளவீடு செய்கிறது. இடையீடடின் உடனடி பெறுபேறுகளுக்கு அப்பால் இடையீட்டின் மறைமுக, இரண்டாம் நிலை விளைவுகளை அடையாளம் காணுவதாகவும் இந்த நியதி அமைகிறது. ஒட்டுமொத்தமாக இத்தகைய முறைமை அல்லது நியமங்களின் மாற்றங்களால் மனித உரிமைகள், பால்நிலை சமத்துவம், சூழலியல் நலன் சார்ந்து மக்களின் நலனோம்புகையில் ஏற்பட்டிருக்கக் கூடிய மாற்றங்களை பரீட்சித்துப் பார்ப்பதாகவும் அமைகிறது.

### மதிப்பாய்வு நியதிகள்

**பொருத்தப்பாடு (Relevance)**
இடையீடு சரியானனைதைச் செய்கிறதா?

**செயற்றிறன் (Effectiveness)**
இடையீடு அதன் நோக்கங்களை அடைகின்றதா?

**தாக்கம் (Impact)**
இடையீடு எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியது?

**இணக்கப்பாடு (Coherence)**
இடையீடு எந்தளவுதூரம் இணக்கமாகவுள்ளது?

**வினைத்திறன் (Efficiency)**
வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன?

**நிலைபேறானதன்மை (Sustainability)**
இறுதிவரையான பயனாற்றுகை அடைம்பெறுகின்றதா?

## தாக்கம் எனும் மதிப்பாய்வு நியதியை பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு பயன்படுத்தலாம் ?

பொதுமக்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்காக பொதுவாக எல்லா நாடுகளிலும் கொள்கைகளுக்காகவும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காகவும் அரசாங்கம் பெருமளவு நிதி முதலீடுகளைச் செய்கின்றது. இதில் வறுமை ஒழிப்பு, கல்வி, சுகாதாரத் துறையை விருத்தி செய்தல், சூழல் பாதுகாப்பு போன்றன அடங்கும். இத்தகைய துறைகளில் நீண்டகாலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அளவீடு செய்வதற்கு **தாக்கம்** எனும் நியதி வாய்ப்பளிக்கிறது.

பாராளுமன்றத்தின் அனுமதியுடன் தேசிய வரவு செலவு திட்டத்தில் மேற்படி இடையீடுகளுக்காக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. நிறைவேற்றுத்துறையை மேற்பார்வை செய்யும் கடப்பாட்டினைக் கொண்ட உயர்சபை என்றவகையில், பாராளுமன்றம் நீண்டகாலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அளவீடு செய்வதற்கு **தாக்கம்** எனும் நியதியினை பயன்படுத்துவதற்கு மேலதிகமாக கடந்த காலங்களில் இதே போன்ற கொள்கைகள் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாகவும் ஆராய முடியும்.

உதாரணமாக கடந்த ஐந்து ஆண்டு காலப்பகுதியில் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எத்தனைக் குடும்பங்கள் மீட்சி பெற்றுள்ளன? சுகாதார மேம்படுத்தல் திட்டத்தின் காரணமாக சிசுமரண வீதம் எந்தளவுக்கு குறைவடைந்துள்ளது? கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் ஊடாக புதிய வேலை வாய்ப்புக்களைப் பெறும் வகையில் மாணவர்களின் அடைவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்பன போன்ற விடயங்களை ஆராயலாம்.

மதிப்பாய்வின் **தாக்கம்** நியதியைச் சரியாகப் புரிந்துகொள்வதன் மூலம் பாராளுமன்ற அவையிலும் குழு அறையிலும் பொருத்தமான கேள்விகளை எழுப்ப முடியும். இதன் மூலம் பிரஜைகளின் நீண்ட கால நலனை நோக்கிய அரசாங்கத்தின் ஒதுக்கீடுகள் குறித்து கேள்விகளை எழுப்பலாம், அறிந்துகொள்ளலாம் பாராளுமன்றத்தில் ஒதுக்கப்படும் நிதியீட்டங்கள் குறுங்காலத்துக்கானதாக மாத்திரமன்றி நீண்ட காலத்தில் மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தக்கூடிய சாதகமான மாற்றங்கள் குறித்து அளவீடு செய்வதற்கும் இந்த நியதி வாய்ப்பினை வழங்குகிறது.

## தாக்கம் இடம்பெற்றுள்ளதை உறுதி செய்யும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பக் கூடிய சாத்தியமான கேள்விகள் ?

பொதுமக்களுக்கான அபிவிருத்தி இடையீடுகள், நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது கொள்கைகள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தின என்பதை அறியும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பக் கூடிய கேள்விகளுக்கு பின்வருவனவற்றை உதாரணமாகக் கொள்ளலாம். ஆனாலும் இத்தகைய கேள்விகளை எழுப்பும்போது, அத்தகைய கொள்கை, இடையீட்டின் தன்மையையும் அது முன்னெடுக்கப்படும் நாட்டின் பின்னணியையும் கருத்திற்கொண்டு விவாதத்துக்கு அவசியமான விதத்தில் கேள்விகளை எழுப்புவது முக்கியமாகும்.

**அ:** திட்டமிடப்பட்ட பெறுபேற்றை அடைவதில் இடையீடானது எத்தகைய நிலைமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது?

**ஆ:** இடையீடானது பால்நிலை சமத்துவம், மனித உரிமைகள், சுற்றாடல் தரம் மற்றும் மக்கள் நலன்பேணுகை முதலான விடயங்களில் எத்தகைய இரண்டாம் நிலை / மறைமுக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?

**இ:** இடையீட்டின் ஊடாக நிறுவனமானது அடைந்த நீண்டகால விழுமிய மாற்றங்கள் ஏதேனும் உண்டா? அப்படியாயின் அவை என்ன?

**ஈ:** இடையீட்டின் விளைவாக எதிர்பாராதவிதமான (நேர்மறை/எதிர்மறை) மாற்றங்கள் ஏதும் இடம்பெற்றுள்ளனவா?

**உ:** குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை அடைந்துகொள்வதற்கு ஏதுவாக இருந்த காரணிகள் எவை? தடையாக இருந்த காரணிகள் எவை?

**ஊ:** இடையீட்டின் தாக்கத்தினை உணர்ந்துகொள்வதனால் கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் என்ன?

---

***Source: De Silva,S.(2021).Theory of Change For Development Success: Workbook. Colombo, Sri Lanka: Sri Lanka Evaluation Association***

## தாக்கம் (Impact) தொடர்பிலான வேறு வள மூலங்கள்:


BetterEvaluation(17July2018). OECD-DAC.Retrievedfrom *https://tinyurl.com/4j2ufa2z*

OECD(2022). Understanding the six criteria: Definitions, elements for analysis and key challenges. Retrievedfrom *https://tinyurl.com/bddeffx8*


## வெளியீடு


ASIA PACIFIC PARLIAMENTARIANS FORUM FOR EVALUATION

APEA Asia-Pacific Evaluation Association

Global Parliamentarians Forum for Evaluation

தொடர்புகளுக்கு: apea.coordinator@gmail.com


## தமிழாக்கத்திற்கான அனுசரணை


SLEvA

Sri Lanka Evaluation Association

தொடர்புகளுக்கு: sleva.sec@gmail.com